University of Jaffna
894.8110922
VEN
57966(AR/AR)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கந்தபுராணம் - தக்ஷகாண்டம்



894.8110922
VEN

ARCHIVES

UNIVERSITY OF JAFFNA LIBRARY
AR/AR

உரை:

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

257966

University of Jaffna
257966
Library

## வெளியீட்டு விழா சிறப்பிதழ்

ளைகைப் பல்கலைக் கழகம்,
தனை,
-67.

257966

வெளியிடுவோர்:
இந்து மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR ALL

# EARTHMOVING JOBS

•

Consult :

# Tractors & Earthmovers

(Pioneers in Earthmoving)

652, PERADENIYA ROAD,

KANDY.

Tele : 7244

T'Grams : "ARNOTRACS"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Latest Amplifiers Tape Music for Parties*

★

**KANDY ELECTRICAL STORES**

55, TRINCOMALIE STREET,
KANDY

*Phone*: 681

**For Fashionable Textiles**

- SAREES
- SILKS
- SUITINGS

and

READY MADE GARMENTS

*Pay a Visit to:*

**RANJANAS**

FASHION SAREE HOUSE,
201, CENTRAL MARKET,
KANDY.

TO LOVERS OF GOOD PHOTOGRAPHY

YOU GET BETTER PICTURES & FAR BETTER VALUE FOR YOUR MONEY

*AT*

**STUDIO LAXMAN**

22, YATINUWARA VIDIYA,
KANDY.

*Phone*: 7121

*The only Place for*

DRUGS & MEDICINES

in the Central Market

IS

**MARKET MEDICAL STORES**

WHOLESALE & DISPENSING CHEMISTS

200, 1st FLOOR
CENTRAL MARKET,
KANDY

*Phone*: 7691

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
வெமயம்
சைவம் தழைக்குக

# கலைவாணி புத்தக நிலையம்

பாடநூற் பிரசுரிப்பாளர்

யாழ்ப்பாணம் — கண்டி

தொலைபேசி: 221 / 7196

தந்தி: 'கலைவாணி'

*For all your Fancy Goods*

VISIT:

# Fancy House

17-19, Trincomalie Street,
Kandy

*Phone:* **588**

*For Choicest Range of*

- **SAREES**
- **NYLONS**

and

**ALL KINDS OF READY MADE GARMENTS**

*VISIT:*

# PALAYAKAT

76, COLOMBO STREET,
KANDY.

DIAL: **399** T'GRAMS: **PALAYAKATS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரை ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அரசியல் ஆதரவு குன்றிய காலங்களில், நாட்டுப்
பற்றும், தாய்மொழிப் பற்றும் தர்மசிந்தையும் நிறைந்த
வள்ளல்களின் ஆதரவினால் எமது நாடும், எமது தாய்
மொழியும், எமது நெறியாகிய சைவ சமயமும் உயிர்
தரித்து வாழ்ந்து வந்திருக்கின்றன. இவ்வள்ளல்களின் மர
பில் வந்தவர் பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள்.
அவரது பேருள்ளத்தில் எழுந்த பெருநினைப்பின் பயனா
கவே, இந்தக் கந்தபுராண உரை இன்று அச்சில் மலர்
கிறது. இன்னும் பல தொண்டுகளைச் செய்யும் வாய்ப்
பினையும், சகல சம்பத்துக்களையும், எல்லாவற்றுக்கும்
மேலாக நிறைந்த திருவருட் பேற்றையும் பெற்று அவர்
நீடூழி வாழவேண்டும் என்று திரிகரணசுத்தியோடு சிவ
சுப்பிரமணியப் பெருமானை வணங்குகின்றோம்.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரைகள்

வேதத்தின் நுட்ப திட்பங்களைப் பூதக்கண்ணுடி போல் எடுத்து விரிவாகக் காட்டுவதும், மக்களை நல்வழிப் படுத்துவதும் புராணம். பதினெண் புராணங்களில் தலைசிறந்தது கந்த புராணம்.

சைவ சித்தாந்தத்தைப் பிரதிபலிக்கும் முகமாகவும், சில பரத்துவத்தை விளங்கும் முகமாகவும் ததிசி உத்தரப்படலம் அமைந்துள்ள தக்ஷகாண்டத்திற்கு தகுந்த ஒருவர் உரை எழுதியது திருவருட்திறனே.

தக்ஷகாண்டத்திற்கு உரையெழுதிய நமது முதுபெரும் புலவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து சைவத்திற்கும் தமிழிற்கும் அரிய தொண்டாற்ற எல்லா நலன்களும் எய்த வேண்டுமென்று, தொல்லை வினைதீர்க்கும் நல்லைக் கந்தன் திருவடிகளை வழுத்துகின்றேன்.

"எந்தவொரு வேளையும் எய்தா திடரதனுல்
கந்த நல்வேளைக் கருது."

இங்ஙனம்

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான்**

நல்லை ஞானசம்பந்தர் ஆதினம்
யாழ்ப்பாணம்
9 - 1 - 1967

---

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய கந்த புராணத் தக்ஷகாண்ட விளக்கவுரையைப் பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கத்தினர் வெளியிட்டு அவரைக் கௌரவிக்க விருப்பதாய் அறிந்து பேருவகையுடையேனுயினேன். இந்து மாணவரின் இச்சிரிய கைங்கரியம் அறிஞர்கள் அபிமானிகள் யாவராலும் என்றும் பாராட்டுதற்குரியதாகும். அவர்களுடைய வாழ்க்கை சிறப்புற்று ஓங்குவதாக.

பண்டிதமணி அவர்கள் சைவாசார சீலராய் அறிஞர்களுட் சிறந்தவராய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் இன்னும் பல நூலுரைகளை எழுதியுபகரித்துப் பல்லாண்டு புகழொளியுடன் விளங்குமாறு எல்லாம் வல்ல பரமேசுரனுடைய பாதகமலங்களைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

இங்ஙனம்

அச்சுவேலி.

**ச. குமாரசுவாமிக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

வேதத்தின் பொருளினையே உள்ளுறையா
வைத்துநனி விளக்கும் நூலென்
றோதுற்ற உபவிருங்க ணங்களெனும்
சீர்படைத்த உயர்பு ராணம்
மேதக்க வைபதினெட் டெனவுரைப்பர்;
அவற்றுள்ளே மேலாய் ஓங்கிப்
போதுற்ற காந்தத்தின் பெருமையினை
ஒருநாவாற் புகழல் ஆமோ.

ஓரிலக்கம் கிரந்தமெனப் பேரளவு பெற்றுடைய
ஒருநூல் அஃதாம்;
சீரிருக்கும் அதன்மாட்டே இல்லாத
தில்லையெனச் செப்பு வார்கள்;
கூரிருக்கும் வடிவேற்பெம் மான்கதையை
ஒருபகுதி கூறும்; அஃதே
நாரிருக்கும் உளமுடைய கச்சியப்பர்
தமிழ்மொழியில் நவின்றார் நன்கு.

மொழிநயமும் பொருள்நயமும் பத்தியெனும்
சுவைமணமும் மூண்டு பாவிற்
கொழிநயஞ்சேர் கந்தபுரா ணந்தமிழ்நாட்
டினிலாரும் கொண்டு போற்றிப்
பொழிகருணை மிகுமுருகன் பெருமையினை
நனியறிந்து போற்றி னார்கள்;
வழிவழியாய்ப் புலவோர்கள் படித்தின்பப்
பெருவிருந்தை மாந்தி னாரே.

என்றாலும் இலங்கையினில் வாழ்தமிழர்
அந்நூலின் ஏற்றம் கண்டு
பொன்றாத அன்பினிலே அதைப்போற்றல்
போற்பிறர்தாம் புரியகில்லார்;
குன்றாத அதைக்கோயில் தொறுமோதி
நலம்பெற்றுக் கூடும் இன்பில்
நின்றார்கள்; இன்றளவும் அதன்பெருமை
இலங்கையினில் நிலவு மோங்கி.

அத்தகுசீ ருடையபெரு நூலினிலே
தட்சகாண் டத்துக் கின்று
வித்தகமா ருரையெழுதி விளக்கேற்றி
வைத்ததுபோல் மேவச் செய்தான்:
முத்தமிழ்வல் லவன், ஆரும் பண்டிதமா
மணியென்று முழங்கிப் போற்றப்
பத்தியினால் பண்பதனால் உயர்கின்ற
கணபதிப்பேர் படைத்த நல்லோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தமுறு தமிழ்ப்புலமை; யாருக்கும் அஞ்சாத
ஆண்மை, என்றும்
விழுத்தகுநூல் ஆய்வதுவே விளையாட்டாய்க்
கொண்டிலகும் மேன்மை, உள்ளம்
பழுத்தசிவ பக்தி யுயர் பண்பவற்றில்
கனிந்தமைந்து பலரும் போற்றித்
தொழத்தகுபே ராளனென நிற்கின்முன்
கணபதிப்பேர் சூடும் அண்ணல்.

பணமுடையார் பலமுடையார் நிலமுடையார்
உறவினர்கள் பலரும் உள்ளார்
எணமுடைய பதவியிலே உயர்வுடையார்
என்றேத்தும் இயல்புக் கெல்லாம்
மணமுடைய புகழ் சின்னுள் நிற்குமுயர்
குணத்தோடு வாய்த்த கல்விக்
கணமுடைய கணபதிப்பிள் ளைபுகழோ
எந்நாளும் கமழும் அன்றே

இவனெழுதி வழங்குமுரை இலக்கணத்தின்
திறம் காட்டும்; இலக்கியத்தின்
நவமுடைய சுவைகாட்டும்; சித்தாந்த
நூற்கருத்தின் நயத்தைக் காட்டும்;
தவமுடையன் இவனென்னும் தகைகாட்டும்;
தமிழேற்றம் தனியே காட்டும்;
பவனருள்சேய் குகனருளால் பண்டிதமா
மணியாண்டு பலவும் வாழி!

இனியிதுபோல் பலநூற்கு விளக்கந்தந்
தேதமிழர் இன்பம் எய்த
நனிசெய்யப் பன்நூலும் புதியனவா
எழுதியன்பின் நல்க, ஞான
முனிவர்தந்த வாறதுபோல் அநுபவநூல்
ஈய இவன் மொய்த்த வீறு
கனியவளங் கனியநின்று பல்லாண்டு
பல்லாண்டு களித்து வாழி!

— கி. வா. ஜகந்நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

★

நெற்றிக்கு அழகென்றல் நீறதுதான்;
கற்றறிந்த நிகரிலாத
பெற்றிக்கு அழகென்றல் அமைதியினைப்
பேசுமுகம் பெரிதுமாழ்ந்த;
புத்திக்கு அழகென்றல் புன்னகையாய்ப்
பொலிசாந்தம்; பூத்தசைவப்
பத்திக்கு அழகென்றல் பண்டிதரைய்
யாவென்று படித்து விட்டேன்.

ஆதலினல் பண்டிதரை ஐயாவென்
றேத்துகிறேன் அவர்பொழிந்த
காதலினல் தமிழ்நங்கை கற்புடைய
ளெனநன்றே கருதுகின்றேன்
மோதலினல் தமிழ்வளர்க்க முற்படுவோர்
அவர்வழியில் முனைந்து நிற்க;
மாதவனல் பெருவாழ்வு பல்யாண்டு
மலருகென வணங்குவேனல்.

—"திமிலைத்துமிலன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

இரேக்கம் மாத்திரம் சிந்தனையாளர்களைத் தரவில்லை.
ஈழமும் ஒருவரைத் தந்துள்ளது. அவர்தான் நம்
பண்டிதமணி அவர்கள். அவரது சிந்தனைகள்
புத்தம் புதியவை - சிந்திக்க வைப்பவை - அர்த்த புஷ்டி
நிறைந்தவை - ஆத்மசாந்தி அளிப்பவை.

★ தர்மம் மிகமிக நீளமானது. அதன் இறுதி மோக்ஷம். மோக்ஷமாவது மெய்ச்சார்பை உணர்ந்து பொய்ச் சார்புகள் விடுபட ஒழுகுவது. தர்மம் இந்த நிலையில் வந்து, முற்றுப் பெறுமானால் அந்த நிலைக்கு அறம் என்று பெயர்.

★ அறிவின் பயிற்சி அன்பு; அன்பின் முதிர்ச்சி அருள். அறிவுக்குப் பயன் அன்பு; அன்பின் பயன் அருள். அறிவுநெறி வேதநெறி; அன்புநெறி தமிழ் நெறி; அருள் நெறி சிவநெறி. அறநெறி இவற்றுக்கு அத்திபாரம்.

★ மனிதன் கவலைக்கடலை நீந்திச் சுகத்தையடைதற்கு வழி என்ன? என்று சிந்தித்தபடி அலைகின்றான். காலந்தோறும் சுகத்துக்கு வழி கண்டு பிடிக்கப்படுகின்றது. அந்தவழிதானே சமயமாய் விடுகின்றது.

★ உபாத்தியாயர் தேவையான காலத்தில், இடத்திற்கேற்றவாறு உபாத்தியாயர் நியமிக்கப்பட்டார்கள். உபாத்தியாயருக்கு உத்தியோகம் தேவையான காலத்தில் நிலைமை தலைகீழாயது. காரணம் வினைவிளைவு.

★ ஓ மனிதனே! உன்தருமம் என்ன? நீ வைதிகனாதற்கு முயல். ஒரு நாள் சைவன் ஆவாய்—நமது சமயம் வைதிக சைவம்.

(தொகுப்பு - நவம்)

— பண்டிதமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம் - எமது ஆதார நூல்

தியான யோகங்களில் செல்கிறவர்கள் தங்கள் யாத்திரையின் இறுதிக் கட்டங்களில் தங்கள் தனிப்பட்ட உயிருணர்வின் பிறப்பிடத்தையன்றி பிரபஞ்சத்தின் பிறப்பிடத்தையே அடைந்துவிடுவார்கள். இந்த இடத்தில் அவர்கள் பெறுகிற அனுபவம் மிகப் பழமை வாய்ந்ததும், மிகப் புதுமை வாய்ந்ததும் ஆக இருக்கும்; நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டங்களையும், எண்ணற்ற கல்பங்களையும் உட்கொண்டதாக இருக்கும்; சாதாரண பௌதிக நியதிகளின் கட்டுக்கடங்காத ஒன்ருக இருக்கும்; தர்க்கரீதியான பாஷைக்குள் அடைபட மறுப்பதாக இருக்கும். ஏதோவொருகால், பாஷையினைக் கருவியாகக் கொண்டு அவ்வனுபவம் புலப்பட்டுவிட்டால், அது புராணமாகத்தான் புலப்படும்.

இசையினை அனுபவிக்க ஒரு பிரத்தியேக உணர்வும் மனோபாவமும் எவ்வாறு வேண்டப்படுகிறதோ, கவிதையினை விளங்க எவ்வாறு ஒரு சிறப்பான உணர்வும் மனோபாவமும் வேண்டப்படுகிறதோ, அவ்வாறே புராணங்களை உணர ஒரு பிரத்தியேகமான உணர்வும், மனோபாவமும் வேண்டும். புராணங்கள் வடமொழிக்கே உரியன என்று பேசப்படுகிறது உண்மையாக இருக்கலாம். ஆனல், தமிழ்ப்பாஷை, அவற்ருல் செழுமை பெற்றதுபோல வேறொன்ருலும் செழுமை பெறவில்லை என்றே கூறலாம்.

சோழர்காலப் பிற்பகுதியில், காஞ்சியில் வாழ்ந்தவர் கச்சியப்ப சுவாமிகள். வாழ்ந்து குமரகோட்டத்தில் குன்றமெறிந்த குமரவேளின் திருவடிகளில் அத்திருவடிகளுக்காக தவம் கிடந்தவர். பயன் கிட்டியது. கந்தசுவாமியின் பேரருட் பொய்கையில் மூழ்கித்திளைத்துக் குடைந்து ஆடி "மீண்ட" அவர், வாய்திறக்க அவர் படித்த வேதங்களும் புராண இதிகாசங்களும் காவியங்களும் தேவார திருவாசகங்களும் திருக்குறளும் எல்லாமே வந்து ஏற்றவாறு இசைந்து, ஒரு ஒருமைப்பாடுடைய கலைவடிவத்தை உண்டாக்கின. இந்த ஒருமைப்பாடுடைய கலைவடிவம்தான் கந்தன் புகழ் பரவும் கந்தபுராணம்.

இந்நூல் இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு ஒரு வழிகாட்டி நூலாக ஆதார நூலாக இருந்து வந்திருக்கிறது. பெரும் நூலறிவு இல்லாதவர்கள்கூட அதனை விளங்கி அதன் ஒளியில் தம் வாழ்க்கையினை செம்மைபெற வாழ்ந்து வந்திருக்கிருர்கள்! இந்நிலைமை இப்பொழுது இல்லை. புல்வரம்பாய பல துறைகளில் தடுமாறும் இன்றைய எங்கள் இளைஞர் சமுதாயத்திற்கு எம்முன்னவர்கள் தந்த பெரும் ஆதார பொக்கிஷம் கந்தபுராணம். கந்தபுராணத்தோடு எம்மிளைஞர்களை தொடர்புபடுத்தி விடுவோமானுல் எம் முன்னவர்களோடு அவர்களைத் தொடர்புபடுத்தியவர்களாவோம்; எம் மண்ணோடு அவர்களைத் தொடர்புபடுத்தியவர்களாவோம். தமிழ் மொழி, தமிழ் இலக்கியங்களோடு வடமொழி, வடமொழி இலக்கியங்களோடு அவர்களைத் தொடர்புபடுத்தி விட்டவர்களாவோம்; எல்லாவற்றிற்கும் மேலாக, முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளோடு அவர்களைத் தொடர்புபடுத்தி விட்டவர்களாவோம். இத்தொடர்புகளெல்லாம் ஓர் ஆற்றல் வாய்ந்த முறையில் அவர்களுக்கு வாய்க்குமென்ருல் அவர்களுக்கு இறப்பேது பிறப்பேது? என்றென்றும் எம் பிள்ளைகுட்டிகளாக தமிழிளைஞர்களாக வாழ்வார்கள். தருணம் வரின் காண்டீபத்தையும் கைநடுங்காது, குரல் நடுங்காது, எடுப்பார்கள்.

சி. முருகவேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் தந்த பண்டிதமணி

(வாழ்க்கைக் குறிப்பு)

கேம்பிரிட்ஜ் ஒக்ஸ்போட் சர்வகலாசாலைகளில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு விசேஷ மதிப்புண்டு. எத்தனையோ நூற்றாண்டுகளாக இடையீடின்றிப் பேரறிஞர்களைத் தோற்றுவித்த கலைப் பீடங்களில் கல்வி கற்றவர்கள் பெருமையுடன் விளங்குவது இயல்பு. அவர்கள் அங்குப் பெற்ற கல்வியை வரன்முறைக் கல்வி என்கிறோம். எந்தக் கல்வியையும் வரன்முறை தவறாமல் படிக்க வேண்டுமென்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். வரன் முறையாகத் தமிழைப் படித்த அருந்தமிழ்ச் சான்றோரொருவர் எங்கள் மத்தியில் இருப்பாரானால் அவர்தான் பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள். அவருடைய வாழ்க்கை வரலாறு விசித்திரமானது. சிறு பராயம் முதலாக அவர் கல்வியைத் தொடர்ந்து கற்றவரல்லர்; ஆரம்ப பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை படித்துவிட்டுக் கல்விக்கே முற்றுப் புள்ளி வைத்துவிட்டார். அப்படியிருந்தும் பிறந்து வளர்ந்த சூழலில் கல்வி மணங் கமழ்ந்து கொண்டிருந்தது. இவருடைய முன்னோர்களும் உறவினர்களும் கந்தபுராணபடனம் செய்வதிலும் அதற்கு ஞானார்த்தங்களை விரித்துரைப்பதிலும் ஊறித்திளைத்தவர்கள். அதுவே அவர்களின்பொழுது போக்கு. பிரசித்திபெற்ற உரையாசிரியர் திரு. ம. க. வேற்பிள்ளை பண்டிதமணிக்கு மிக நெருங்கிய உறவினர்; அல்லாமலும் அயல் வீட்டவர். உரையாசிரியரின் புதல்வர் திரு. மகாலிங்கசிவம், பண்டிதமணியின் பால்ய நண்பர். திரு. வேற்பிள்ளை அவர்களின் வீட்டில் இரவு பகலாக எந்நேரமும் வித்துவத் சம்பாஷணைகள் நடந்து கொண்டிருக்கும். அவருடைய வீட்டில் எங்கே பார்த்தாலும் புத்தகங்களும் ஏடுகளுமாகக் காட்சியளிக்கும். பண்டிதமணி பள்ளிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டாலும் கேள்விப் படிப்புக்குக் குறைவில்லை. 'கற்றில ராயினும் கேட்க' என்ற திருவள்ளுவரின் திருவாக்குக் கிணங்கப் பூர்வ புண்ணியத்தின் பலனாகப் போலும் அவருடைய முயற்சியின்றியே கேள்வியறிவு உண்டாயது.

இப்படியிருந்து வரும் நாட்களில் பண்டிதமணிக்குப் பதினெட்டு வயது பூர்த்தியானது. அவருடைய மனதில் புதியதொரு ஆசை அரும்பியது. தானும் இலக்கண இலக்கியங்களைப் படிக்க வேண்டுமென்று அவர் எண்ணினார். தனது கருத்தை உரையாசிரியர் திரு. வேற்பிள்ளையின் புதல்வர் திரு. நடராசாவிடம் வெளியிட்டார். உரையாசிரியர் திரு. வேற்பிள்ளை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடமும் வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளையிடமும் படித்தவர். அதனால் உரையாசிரியரின் மகன் என்ற முறையில் திரு. நடராசாவுக்கு நாவலரின் மருகர் திரு. கைலாசபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் ஆகியவர்களின் பழக்கம் உண்டு. திரு. நடராசா பண்டிதமணியைத் திரு. கைலாசபிள்ளையிடம் அழைத்துச் சென்றார். பண்டிதமணி, குமாரசுவாமிப் புலவரால் பரீட்சிக்கப்பட்டு ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிலுள்ள காவிய பாடசாலையில் மாணவனாகச் சேர்க்கப்பட்டார்.

காவிய பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்களைச் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் படிப்பிப்பார். பண்டிதமணி பல நூல்களைப் புலவரவர்களிடம் முறைப்படி பாடங் கேட்டுப் படித்து வந்தார். பண்டிதமணியின் அளவற்ற ஆர்வத்தையும் கூர்த்த மதியினையும் கண்ட புலவரும் திரு. கைலாசபிள்ளையும் அகமும் முகமும் மலர்ந்து ஆவன செய்து ஊக்கமளித்து வருவாராயினர். நன்னூற் காண்டிகையுரை, தண்டியலங்காரம், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக்காரிகை என்னும் இலக்கண நூல்களை ஐயந்திரிபறக் கற்றார். புலவர்கள் எந்த நூலையும் மேலெழுந்த வாரியாகப் பாடஞ் சொல்லும் வழக்கம் கிடையாது. ஒவ்வொரு சூத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்திலும், உரையிலும் என்ன என்ன நுணுக்கங்கள் உண்டோ அவற்றை யெல்லாம் மாணவர்கள் முற்றும் கிரகித்துக் கொள்ளும் முறையில் விளக்கமும் அப்பியாசமும் கொடுத்துப் பயிற்சி அளிப்பார். பண்டிதமணி கற்ற கல்வியின் ஆழ அகலங்களைக் குறிப்பிடும்போது 'அவர் எல்லா நூல்களையும் எழுத்தெண்ணிப் படித்தவர் அல்லவா!' என்று சொல்லிப் பலர் பாராட்டுவார்கள். இலக்கணம் படிப்பதின் பயன் மொழித் திறத்தின் முட்டறுத்தல் என்று சொல்லுவது மரபு. ஒவ்வொரு சொல்லின் இலக்கண முடிவுகளையும் நன்கு அறிந்தவனுக்கே இலக்கியங்களின் நுண் பொருள்கள் புலப்படும். அதனால் முன்னைய நாட்களில் இலக்கணம் படிப்பதில் மிக்க கவனம் செலுத்தப்பட்டது. இக்காலத்தில் ஆரம்ப இலக்கணத்தை அறியாமலே தொல்காப்பியம் படிக்க முற்படுகின்றனர். சிற்றிலக்கியங்களைப் படிக்காமலே பேரிலக்கியங்களைப் படிக்கின்றார்கள். அதனாற் பயனில்லை. புலவரவர்கள் பாடஞ் சொல்லும்போது இன்ன நூல் கற்ற பின்னர் இன்ன நூல் கற்க வேண்டும் என்ற ஒழுங்கு முறை தவறாமல் படிப்படியாக நூல்களைக் கற்பிப்பார். பண்டிதமணி அந்தாதி, தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்களையும், திருக்குறள், திருக்கோவையார், வில்லிபாரதம், கம்பராமாயணம் முதலான பேரிலக்கியங்களையும் புலவரவர்களிடம் படித்தார். இப்படியாக நான்கு ஆண்டுகள் கழிந்தன. புலவரின் உடல் நிலை குன்றியது; அவருடைய ஆவி பூத உடலை விட்டு நீங்கியது.

புலவரவர்களின் பிரிவு பண்டிதமணிக்கு ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவருடைய நிலைமை கலங் கவிழ்ந்த நாய்கன் நிலைமை போலாயிற்று. அக்காலத்தில் தமிழறிஞர்கள் என்றிருந்தவர்கள் எல்லோரும் ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குச் சென்று நாவலரின் மருகர் திரு. கைலாசபிள்ளையுடன் அளவளாவிச் செல்லுவது வழக்கம். பண்டிதமணி அவ்வறிஞர்களோடு இலக்கண இலக்கியங்களின் நுண் பொருள்களைக் கலந்துரையாடித் தனது ஆசங்கைகளைப் போக்கி இன்புற்று வருவார். அப்போது அவருக்குப் புதியதோர் ஆசை உண்டாயது. மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதுதான் அந்தப் புதிய ஆசை. அந்தப் புதிய ஆசையைப் பூர்த்தி செய்ய அவருக்கு வழிவகை தெரியவில்லை. அக்காலத்தில் உரையாசிரியர் திரு. வேற்பிள்ளை சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர் ஸ்தாபித்த தமிழ்க் கல்லூரியில் தலைமை ஆசிரியராய் இருந்துவந்தார். அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது தனது கஷ்டங்களைச் சொன்னார். திரு. வேற்பிள்ளையவர்கள் அந்தக் கஷ்டங்களைப் போக்க முன்வந்தார். தம்மிடம் படித்துச் சென்னைச் சர்வகலாசாலையால் நடாத்தப்படும் வித்துவான் பரீட்சையில் தேறிய வித்துவான் ந. சுப்பையபிள்ளையவர்களை இங்குள்ள காவிய பாடசாலையில் படிப்பிக்கும்படி அனுப்பினார். வித்துவான் சுப்பையபிள்ளை பல தமிழ்ப் பிரபந்தங்களைத் தில்லைநாயக முதலியாரிடமும், ஏனைய இலக்கண இலக்கியங்களைத் திரு. வேற்பிள்ளையவர்களிடமும், பாணினி சித்தாந்த கௌமுதி அலங்கார சாஸ்திரம் நாடகம் காவியம் ஆகிய வடமொழி நூல்களைப் பாண்டிராஜ சாஸ்திரிகளிடமும் வரன்முறை வழுவாது கற்றுச் சமப்பிரதான வித்துவான் பரீட்சையில் சித்தியடைந்தவர். வித்துவான் சுப்பையபிள்ளையின் நுண்மாண் நுழைபுலத்தைக் கண்ட பண்டிதமணியின் மகிழ்ச்சிப் பெருக்கு இவ்வளவென்று சொல்லுந் தரத்தன்று. நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினியார்க்கினியம், இளம்பூரணம், சொல்லதிகாரம் சேனாவரையருரை, தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம், தருக்க சங்கிரகம் ஆகிய நூல்களின் திட்ப நுட்பங்களை வித்துவானிடம் கருத்தூன்றிப் படித்தார். ஆசிரியர்களுக்குப் பொருள் நனி கொடுக்கும் மாணவரிலும் பார்க்க மதிநுட்பமும் பேரூக்கமும் உடைய மாணவர்களில் மிக்க அன்பு உண்டாவதே இயல்பு. வித்துவானவர்களும் தனக்கு நல்லதோர் கொள்கலம் வாய்க்கப் பெற்றதென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி உவகை கொண்டு பண்டிதமணிக்குப் பாடஞ் சொல்லுவதில் அளவற்ற ஆர்வங் கொண்டார்; பண்டிதமணியும் தனக்கேற்பட்ட ஐயங்களைக் கேட்டறிந்து கசடுகளைப் போக்கித் தனது அறிவைச் செப்பஞ் செய்வதில் வித்துவானைப் பெரிதும் பயன் படுத்திக் கொண்டார். வித்தகப் பத்திராசிரியர் திரு. கந்தையா என்பவரின் தொடர்பும் பண்டிதமணிக்கு ஏற்பட்டது. அவர் சங்க நூல்களின் போக்கில் கவிபாடும் வன்மையும், சமய நூற் பயிற்சியும், கடினமான இலக்கியங்களைப் பாடஞ் சொல்லும் ஆற்றலும் மிக்கவர். அவரிடம் இரகுவம்சம், தணிகைப் புராணம், சீவக சிந்தாமணி சங்க இலக்கியங்கள் ஆகியவற்றைப் படித்தார். இலக்கண இலக்கியங்களை எழுத்தெண்ணிப் படித்த பண்டிதமணிக்குப் பண்டித பரீட்சை விளையாட்டாய் இருந்தது. எவ்வித சிரமமுமின்றியே அதிற் சித்தியடைந்தார்.

அப்போது கோப்பாயிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உரையாசிரியர் வேற்பிள்ளையின் புதல்வர் திரு. மகாலிங்கசிவம் விரிவுரையாளராய் இருந்தார். திரு. மகாலிங்கசிவத்தின் தூண்டுதலால் அக் கலசாலையில் இரண்டு ஆண்டுகள் படித்து ஆசிரியப் பயிற்சி பெற்றார். ஆசிரியர் பயிற்சி பெறும்போது இவருடன் படித்த பல மாணவர்கள் இவரிடம் பல நூல்களைப் படித்துப் பாலபண்டித பரீட்சையில் தேறினர்கள். இலக்கண இலக்கியங்களைச் சுவை ததும்ப பாடஞ் சொல்லும் பேராற்றல் உடையவர் பண்டிதமணி என்ற புகழ் அப்போதே எங்கும் பரவத் தொடங்கியது.

அதனைக் கேள்வியுற்ற சைவ வித்தியாவிருத்திச் சங்க மானேஜர் திரு. சு. இராசரத்தினம் பண்டிதமணியிடம் சென்று திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றும்படி கேட்டார். அங்கே முப்பது ஆண்டுகள் சேவை புரிந்தார். அந்தக் கலாசாலையிலேயே ஒரு காவிய பாடசாலையை அமைத்து அங்கே ஆசிரியப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கும் பிற மாணவர்களுக்கும் பிரவேசபண்டித பாலபண்டித பண்டித வகுப்புகளைப் பல ஆண்டுகள் நடத்தி வந்தார். அதன் பயனாகப் பல பண்டிதர்களும், எத்தனையோ பால பண்டிதர்களும் புற்றீசல் போலக் கிளம்பினர்கள். பண்டிதமணியிடம் ஆசிரியப் பயிற்சி பெற்றவர்கள் எல்லோரும் ஒரு திறத்தினரல்லர். பண்டிதர்கள், பால பண்டிதர்கள், வித்துவான்கள் எனப்படுவோர் பலர்; மெற்றிக்குலேஷன் தேர்வில் சித்தியடைந்தோர் பலர்; அநுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் பலர். சிலர் தாம் அறியவேண்டிய பொருள்கள் யாவற்றையும் முன்பே அறிந்து விட்டதாகவும் பண்டிதமணியிடம் கேட்டறிவதற்கு எதுவும் இருக்காது என்று எண்ணியதுமுண்டு. சிலர் தாம் ஷேக்ஸ்பியர் கீற்ஸ் ஷெல்லி முதலிய ஆங்கிலப் புலவர்களின் கவிதா ரசத்தைப் பருகியவர்கள் என்றும் தமிழிலக்கியம் வெறும் புராணக் குப்பையேயன்றி ஆங்கிலத்துக்கு ஈடாகாதென்றும் எண்ணியதுண்டு. இப்படி எண்ணியவர்கள் பண்டிதமணி படிப்பிக்கும்போது இறுமாந்து அலட்சியமாய் இருந்ததுமுண்டு. ஆனல் அவர்கள் எல்லோரையும் தாம் எண்ணியது முற்றும் தவறு தவறு என்று சொல்லித் தருக்கடங்கித் தம் வசமிழந்து தமிழிலக்கிய ரசனையில் மூழ்கித் திளைக்கச் செய்துவிடுவார் பண்டிதமணி. அல்லாமலும், ''நாம் இதுகாறும் புற அழகையே கண்டு களித்தோம்; இன்றுதான் இலக்கியங்களின் திட்ப நுட்பங்களைக் கேட்டுணர்ந்தோம்'' என்று நினைந்து நினைந்து அவர்கள் தங்கள் அறியாமைக்குப் பச்சாத்தாபப் படுவர். பண்டிதமணியின் நுண்மாண் நுழைபுலத்தை ஓர் அறிஞர் கூறியது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

''தொல்காப்பியத்திலும் பல்காப்பியங்களிலும் பாண்டித்தியம் பெற்ற பண்டித மேதைகள் தாம் கற்ற நூல்களின் உட்பொருளை அறிய விரும்புவராயின் பண்டிதமணி அவர்களிடம் சென்று உண்மைப் பொருளைக் கேட்டு உவகையுறுவர். பண்டிதமணியிடம் இலக்கியபாடம் கேட்போருக்கு அவரருகிலுள்ள மரமும் அருமையான கவி சொல்லும், மதுரமான இலக்கியம் பேசும், வள்ளுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்த அருமறைக்கு விளக்கம் கூறும், சிவஞானச் செம்பொருளையும் விரித்துரைக்கும்.''

சைவாசிரிய கலாசாலையில் கடமையாற்றி வரும்போது அக்கலாசாலையின் உப அதிபராயிருந்த திரு. கைலாசபதியவர்களோடு பண்டிதமணிக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டது. திரு. கைலாசபதியவர்கள் சைவசித்தாந்த சாத்திரங்களையும் சைவத் திருமுறைகளையும் கற்றுத் தெளிந்த அறிவின் பொக்கிஷம்; அலையடங்கிய சமுத்திரம் போன்ற நற்பண்பும் இமயமலை போன்ற அறிவின் திட்பமும் உடையவர். அவர் வாயிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு பொருளும் விலை மதிக்க முடியாத இரத்தினம் போன்றது. அந்த நுண்பொருள்களை எந்த நூலிலும் படித்தறிய முடியாது. அவை இவருடைய பரிசுத்தமான மனத்திரையில் எழுகின்ற புதிய காட்சிகள் என்று பண்டிதமணி சொல்வதுண்டு. அவரை மந்திர திருஷ்டாக்களின் வரிசையில் வைத்து மதித்து வந்தார் பண்டிதமணி; திரு. கைலாசபதியவர்களின் தொடர்பினால் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையும் பண்டிதமணி படித்தார்; தான் படித்ததோடு பல ஆண்டுகளாக ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவஞான போதம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் திருவருட்பயன் என்னும் நூல்களைப் பலருக்குப் படிப்பித்து வந்தார்.

பண்டிதமணி கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் நாவன்மை படைத்தவர். அவர் இதுகாறும் எழுதிய கட்டுரைகள் எத்தனை என்று கணக்கிடமுடியாது. அவற்றுட் சிலவற்றைத் திரட்டி இலக்கியவழி, பாரத நவமணிகள், சைவ நற்சிந்தனைகள், கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை, சமயக் கட்டுரைகள், கம்பராமாயண கவிநயக் கட்டுரைகள் என்னும் நூல்களாக வெளியிட்டிருக்கிறார்கள். அன்பினைந்திணை, துறவும் கீதையும், காரைக்கால் அம்மையார், தெய்வயானை திருமணம், கோயில், திருவருட் பயன் விருத்தியுரை, ஆறுமுக நாவலப் பெருந்தகை என்னும் நூல்களை விரைவில் வெளியிடுவதற்கு பழைய மாணவர்கள் ஆயத்தம் செய்துகொண்டிருக்கின்றார்கள். வெளியிடப்படாத கம்பராமாயணக் கட்டுரைகளையே எத்தனையோ புத்தகங்களாக வெளியிடலாம்.

கந்தபுராணம் பண்டிதமணிக்கு ஒரு குல வித்தை போன்றது. அதன் தக்ஷ காண்டம் பண்டிதமணியவர்களின் உரையுடன் இன்று வெளிவருகின்றது. அதனைப் படித்து அனைவரும் பயனடைவார்களாக. அவர் நோயற்ற வாழ்வும் நீண்ட ஆயுளும் பெற்று தமிழுக்கும் சைவத்துக்கும் பல அரும் பணிகளைப் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
முருகன் துணை

# பாராட்டுக் கவிதை

✶

## கட்டளைக் கலித்துறை

ஆனை முகன்மலை மங்கைபங் காளன் அயிற்பெருமான்
தேனை மடுத்த கமலா சனிகள் திருப்பதங்கட்
கூனை யுளத்தை யுரைகளை யாக்கி யுரைபகர்ந்த
கோனை வழுத்திநல் லாசிகள் கூறுவங் கூரன்பிலே

நீட்சிப் பெருந்தென்னை வாழைகள் சூதம் நிமிர் வருக்கை
காட்சிக் கினிய கழனிகள் தேங்கிக் கதித்ததென்ம
ராட்சிப் பகுதியிற் சாவகச் சேரி யடுத்தநல்லூர்
மாட்சிப் புகுந்திடு மட்டுவில் தோற்றும் மகிபனன்றே

தேறு தமிழ்மொழி சைவமும் வாழச் செனித்தபிள்ளை
யாறு முகத்திரு நாவலன் செய்த அரும் பணியின்
கூறு முடிக்கும் நியதியில் வந்துற்ற கோளரியாம்
வீறு படைத்துள பண்டித மாமணி வித்தகனே

முத்திக்கு நேர்வழி காட்டுசித் தாந்த முறைதெரிந்து
தித்திக்கு நல்லுரை செப்பிய பண்டிதர் சீர்மணியாம்
புத்திக்கு மாமலை யொத்தவ ரிந்தப் புவித்தலத்தில்
எத்திக்கு மோசைசென் றெய்தநல் வாழ்க்கை யினிதெய்தவே

கந்த புராண முறுகாண்ட மாறிற் கருத்தமைந்து
வந்த திருத்தக்க காண்டத் துரையை வழங்கியென்போற்
புந்தி வளமற்ற பேர்களும் மிக்க புனிதமுறுஞ்
சிந்தை பெறச்செய்த பண்டிதர் வாழ்க செகதலத்தே

பூக்குல வுந்திரு மாதர்க ளுக்கம் பொருந்திமிகு
மாக்கமுங் கற்றமெய்ஞ் ஞானமுந் தேகத் தருஞ்சுகமும்
வாக்கில் வலிமையும் மேலோ ருறவும் மலிந்துநன்னீர்
தேக்குங் கடற்புவி பல்லாண்டு வாழ்க சிறந்தின்பமே

மண்ணோர் பரவவும் மாதிரம் போற்றவும் வானுறைந்த
விண்ணோர் புகழவும் வேற்றகத் தார்கள் வியக்கவுநங்
கண்ணுன காந்தத் துயர்காண்ட நல்லுரை கண்டனன்சீர்ப்
பண்ணுன பண்டித மாமணி வாழ்கபல் லாண்டுகளே.

புலவர் சி. சின்னையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு பொலிந்து வாழ்க!

★

வடமொழியென் பாற்கடலுள் விளையமிழ்தைக்
கச்சியப்ப மாந்தென் றீயத்
திடமுனிவன் தோய்ந்தாய்ந்து தினமடைந்த
பேரின்பத் திறத்தா லூற்று
மடையெனவே பெருகியநல் லமிழ்தையெழிற்
றமிழாக வமைத்தே முத்தி
யடையவழி காட்டுகந்த புராணமென
அமைத்தநன் னூற் கவனி மெச்ச

பண்டையநான் மறையாறே ஞகமத்தி
னுட்பொருளா யமர்ந்தோன் சால
வெண்டிசையுந் தொழுதேத்து மியல்புடையோ
னிருந்தமிழி னுருவங் கொண்டோ
னுண்டமிழ்தின் சுவையுணர்ந்தோ னுறுகாதல்
பெருகியதால் தமிழின் மீது
பண்டிதமா மணியெனவே யொருவனையீங்
கீய்ந்திட்டான் பாரோ ருய்ய!

அரியபொருண் மறைநாலு மாகமநூ
லுந்தேர்ந்தே யவற்றுண் மூழ்கிப்
பிரியமுடன் முதல்முனிவ னுரைவிரித்த
பெற்றியைப்போற் பெரியோர் போற்று
மரியவொரு வுரைபகர்ந்தான் பண்டிதமா
மணியதனு லரும்பே றுற்றேம்
புரிசடையோ னருட்பெருக்கைப் பொருந்தியவன்
பல்லாண்டு பொலிந்து வாழ்க!

— வ. கோவிந்தபிள்ளை

தமிழ்ப்பகுதி,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
21-1-1967

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இயற்கையன்னையின் எழில் நலம் மிக்க பேராதனைப் பல்கலைக் கழகத்தில், குன்றமெறிந்த குமரவேளுக்கு இந்து மாணவர் ஆலயம் அமைத்துள்ளனர். ஆலயத்துக்கான கட்டட வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்ற இந் நேரத்திலே, முருகன் புகழ் பேசும் அத்தியதிமதுர சுத்தச் செந்தமிழாகிய கந்த புராண உரைவெளியீடும் நிகழ்வதென்றால் எத்துணைப் பொருத்தம்! சைவ சித்தாந்த சாகரம் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய இவ்வுரை நூலை, பல்கலைக்கழக இந்து மாணவர் வெளியிடும் வாய்ப்பு—கிடைத்தற்கரியதோர் பெரும் பேறென்றே கொள்ளவேண்டும்.

இவ் வெளியீட்டு விழாவை அழகு செய்யும் பொருட்டு வெளியாகிறது இச்சிறப்பு மலர். இதற்குப் பெருந்துணை புரிந்த செல்விகள். கு. அரவிந்தகுமாரி, மு. ஜெயகுமாரி ஆகியோருக்கும், செயற்குழு உறுப்பினரான செல்விகள். இ. சௌந்தரேஸ்வரி, ந. லீலாவதி ஆகியவர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும், புதிய (1967/68ம் வருடத்திற்குரிய) இளம் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்ட செல்வி ம. பத்மலோசனி அவர்களையும் நாம் மறக்க முடியாது. அன்னாருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்னும், இம் மலரை அச்சிட உதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும், சிறந்த முறையில் குறுகிய காலத்தில் அச்சிட்டுதவிய செய்தி அச்சகத்தாருக்கும் எம் உளங்கனிந்த நன்றிகள்.

வணக்கம்


**மணி மார்க் மசாலைத்தூள்**



சுத்தமானது - சுகாதார முறையில்
தயாரிக்கப்பட்டது.

மணம் — குணம் — சுவை நிரம்பியது
விசேட வைபவங்களுக்கும்
வீட்டுத் தேவைகளுக்கும் உகந்தது.

★

**சந்திரா கிரைண்டிங் மில்**

தொலைபேசி: 7539 40, பேராதனை வீதி, கண்டி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*For*
*Ladies & Gents Requirements*

- FANCY GOODS
- LACES
- BUTTONS
- HAND BAGS
- HAIR WIGS
- BRASSIERS
- BLOUSE

*Visit:*

YASIM STORES
54, COLOMBO STREET,
KANDY

For
Your Entire Satisfaction
*IN*

- MEDICINES
- VETERINARY PRODUCTS
- J & J BABY PRODUCTS

ETC.,

*VISIT:*

Sri Lanka Pharmacy Limited
39, TRINCOMALIE STREET,
KANDY
T'Phone: 606 T'Grams: 'Sellpills'

*VISIT:*

KANDY TEA STORES
DISTRIBUTORS OF C. W. E. TEXTILES
and
STOCKISTS OF:
Textiles, Slacks, Shirts, of all varieties, Sarees, Suitings, Shirtings, High Grown Tea, Toilet appliances, Wristlets, Childrens' Ready-made Garments, Fancy Goods, Costume Jewellery, and Sundries etc.

2 & 11 Yatinuwara Vidiya
KANDY

*Phone:* 7193

*DIAL:* 7158

For all your:-

Building Materials
Decorative Finishes &
Water Service Materials

*

*National Trading Corporation*
No. 10, D. S. Senanayake Veediya,
KANDY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி மாநகரில்

கண் நிறைந்த வண்ணங்களில்
எழில் நிறைந்த டிசைன்களில்
பொன்போல் உங்கள் மேனியை சிறப்புடன்
விளங்கவைக்கும் சிறந்த ஜவுளி மாளிகை

# ராஜா ஸ்டோர்ஸ்

தொலைபேசி: 256

கொழும்பு வீதி
கண்டி

தந்தி: "ராஜா"

*For*
*Your daily requirements*
*of*

ALL KINDS OF PROVISIONS
ECONOMY and
SATISFACTION GUARANTEED

*VISIT*:

## BALAKRISHNA STORES

WHOLESALE & RETAIL DEALERS
and
PAWN BROKERS

136, COLOMBO STREET.
KANDY

*Phone:* 534

THE SUPER PLACE IN THE HEART OF
KANDY
*for*

LADIES, GENTS & CHILDRENS' REQUIREMENTS

- FANCY GOODS
- TEXTILES ETC.

## THE ECONOMICAL STORES

8, Yatinuwara Veediya
Kandy

*DIAL:* 7074    *T'Grams:* 'ECONOMIC'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பு:
செய்தி அச்சகம்,
241, கொழும்பு வீதி,
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org